Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

சென்னையில் உங்கள் விடுதலையின் நாள்



ஏப்ரல் 14 வெள்ளிக்கிழமை (அரசு விடுமுறை)

இடம்: J.J. மஹால்,
L.K.S. தங்கமாளிகை எதிரில், G.S.T. மெயின்ரோடு,
கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தேவ செய்தி & ஜெபம்

Rev.Dr.A. ஜாஷ்வா

தொடர்புக்கு : 94888 45627 & 80987 42638

நாகர்கோவிலில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்



மே 1 திங்கட்கிழமை (அரசு விடுமுறை)

இடம்: விஜயதா திருமண மண்டபம்,
WCC ரோடு, நாகர்கோவில்.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627 & 82203 17472

கோயம்புத்தூரில் உங்கள் விடுதலையின் நாள்

மே 1 திங்கட்கிழமை (அரசு விடுமுறை)

இடம் : ஹோட்டல் ஃபார்சூன் (Hotel Fortune)
5–வது மாடி, மீட்டிங் ஹால் A/C (லிப்ட் வசதி உண்டு)
அன்சாரி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர்.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தேவ செய்தி & ஜெபம்

Rev.Dr.A. ஜாஷ்வா




தொடர்புக்கு : 94888 45627 & 80987 42638

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:4 ஏப்ரல் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 4 April 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவான் 11:25)

## உயிருக்கு ஆபத்தான நிலையை மாற்றி ஜீவனைக் கொடுத்த கர்த்தர்



எனது கணவர் பெயர் ஆரோக்கிய பிரவீன்ராஜ். அவர் வெளிநாட்டில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றார். திடீரென்று அவருடைய கணையத்தில் வீக்கம் ஏற்பட்டு அதிலிருந்து இன்பெக்ஷன் (Infection) ஆகி நுரையீரலுக்கு சென்று நுரையீரலில் ஓட்டை ஏற்பட்டு விட்டது. நுரையிரலில் உள்ள தண்ணீர் எல்லாம் வெளியே வர ஆரம்பித்து விட்டது. இதனால் சுவாச குழாயில் பாதிப்பு ஏற்பட்டு மூச்சுவிட முடியாமல் ஆபத்தான கட்டத்தில் வெளிநாட்டிலுள்ள ஒரு பெரிய மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். வென்டிலேட்டர் மற்றும் Tracheostomy எல்லாம் செய்தும் உயிர் பிழைப்பது கஷ்டம் என மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

அந்த நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்து கணவரின் நிலையை கூறினேன். ஐயா அவர்களும் ஜெபித்து **"உண்மையிலேயே அவர் மரணதருவாயில் தான் இருக்கிறார். இருப்பினும் உனக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. இளம் தம்பதிகளாக நீங்கள் இருக்கிறீர்கள். நான் கண்டிப்பாய் ஜெபம் செய்கிறேன்" என்று சொல்லி "இயேசுவே அந்த மகனுக்கு இருக்கிற சகல வியாதிகளையும் நீக்கி மரணத்திலிருந்து அவரை விடுவித்தருளும்"** என்று கண்ணீரோடு ஜெபித்தார்கள். நானும் உடனடியாக கணவர் இருக்கும் நாட்டிற்கு சென்று அவரை பார்க்க சென்றேன். மருத்துவமனையில் அவரை பார்க்க எனக்கு அனுமதியும் வழங்கினார்கள். எனது கணவர் தீவிர சிகிச்சை பிரிவில் மிகவும் பரிதாபமாக இருந்தார். பேசமுடியாத, ஒன்றும் செய்ய முடியாத நிலையில் படுக்கையில் இருந்தார்கள். மிகமிக ஆபத்தான நிலை, பிழைப்பது கஷ்டம் என்று சொல்லிவிட்டனர்.

**அங்கிருந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொலைப்பேசி வாயிலாக மீண்டும் தொடர்பு கொண்டேன். அவர்கள் கணவரின் காதில் தொலைப்பேசியை வையுங்கள் என்று கூறியபடி எனது கணவருக்காக மிகுந்த பாரத்துடன் ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! மரணத்தருவாயில் இருந்த என் கணவர் மீண்டும் உயிர் பெற்றார். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறார். மீண்டும் வேலைக்கு செல்கின்றார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! தேவனை நன்றி உள்ள இருதயத்தோடு துதிக்கின்றேன். சகோதரர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.**

- திருமதி. இவாஞ்சலின், திருச்சி.

நாங்கள் சற்றும் எதிர்பாராத வண்ணம் 25 லட்சம் செலவில் அழகிய வீடு கட்டி முடிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

திருமதி. காமாட்சி, திருச்சி.

### தீர்க்கதரிசியின் வார்த்தைபடியே குழந்தையைக் கொடுத்த கர்த்தர்

என் பெயர் கிறிஸ்டோபர். என் மனைவி பெயர் ஜெயந்தி. எங்களுக்கு திருமணமாகி 4 வருடங்களாக குழந்தை இல்லை. TMB-ல் வேலை பார்த்துக் கொண்டிருந்தப்பொழுது நாங்கள் திருச்சியில் இருந்தோம். 2005-ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். அப்பொழுது எங்கள் இருவருடைய தலை மீதும் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கைகளை வைத்து உங்களுக்கு மகன் பிறப்பான். அவனுக்கு இம்மானுவேல் என பெயர் வையுங்கள் என்றார். நாங்களும் விசுவாசத்துடன் சென்றோம். ஒரு சில நாட்களில் என் மனைவி கர்ப்பம் தரித்தாள். ஆனால் ஏராளமான பிரச்சனைகள் ஏற்பட்டது. முதலில் என் மனைவிக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டது. ஆண்டவர் கிருபையால் சரியானது. அதன்பின் என் மனைவி 6 மாதமாக இருந்தப்பொழுது நீர் குடம் உடைந்து தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டது. ஏசாயா 27:3-ன்படி மூன்று மாதங்கள் கருவில் உள்ள குழந்தையை கர்த்தரே பாதுகாத்து.



சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறக்க உதவி செய்தார். குழந்தை பிறந்தவுடன் மருத்துவர்கள் அனைவரும் இது Medical Miracle என்றார்கள். மருத்துவத்தால் செய்யக்கூடாத அதிசயம் என சாட்சி கொடுத்தார்கள். மகனுக்கு இம்மானுவேல் என பெயர் வைத்தோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். Dr.ஆனந்த ஸ்திரா அங்கிள் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

- சகோ. கிறிஸ்டோபர், தூத்துக்குடி.

## திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்



**2023 ஏப்ரல் 29**
**(சனிக்கிழமை)**

நேரம் : காலை 9.30 மணி முதல் 2 மணி வரை

**இடம்**

அன்பரின் ஊழிய ஜெப மையம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18.

**தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**

திருச்சியில் உங்களுக்காக நடைபெறுகிற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு குடும்பத்துடன் வாருங்கள்.
நிச்சயமாக அதிசயங்களை காண்பீர்கள்!

மேலும் விபரங்களுக்கு 95004 87059 94888 45627



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ ஏப்ரல் 2023 ◆ இதழ் 4

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ தாசர்களே,

நமக்காக பாடுபட்டு மரித்து, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

நம் கர்த்தராகிய இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுலை நினைவுகூறும் இந்த நாட்களில் சிலுவையின் உபதேசங்களைக் குறித்த மகத்துவங்களை நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.

**மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். ஏசாயா 52:14**

மேற்கண்ட வசனத்தின்படி இயேசு நமக்காக மிகுந்த பாடுகளை அடைந்து உபத்திவத்தினூடே கடந்து சென்றார். அவரை ஒரு பாவி என உலகம் கண்டனம் செய்தது. அவருடைய பாடுகள் நிமித்தம் நாம் அவரை கண்டுக் கொள்ள முடியாத அளவிற்கு அவர் முகம் அந்தக்கேடு அடைந்து இருந்தது. He was unrecognizable. இவர் ஒரு பரிசுத்தவான், மேசியா என ஒருவரும் கண்டு கொள்ள இயலாநிலை. ஆம்! இதே நிலைதான் இன்றும் தொடர்கிறது. அவரை அறிந்தவர்களாகிய நாமும் அவரை கண்டுக்கொண்டு அங்கீகரிக்க தயங்குகிறோம். அவரை அறியாத உலகமும் அவரை அங்கீகரிக்கத் தயங்குகிறது.

**ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்காக பாடுபடும் மக்கள் எல்லா தேசங்களிலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றார்கள். இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டதுபோலவே இவர்களின் இரத்தமும் சிந்தப்படுகிறது. அன்பு சகோதர, சகோதரிகளே, உங்கள் வாழ்வில் நீங்களும் கிறிஸ்துவை அங்கீகரித்து வாழ கற்றுக் கொள்ளுங்கள். அவருக்காக பாடுபட அஞ்சாதிருங்கள். அனைத்து பாடுகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளுங்கள்.**

**இயேசு சிலுவையிலே வெற்றி சிறந்தது போலவே, நமக்கும் வெற்றி தந்து யுகயுகமாய் அவரோடுகூட வாழ கிருபை செய்வார். (2தீமோ.2:11-12)**

**கடந்த மாதம் எங்கள் தகப்பனாரின் பிறந்த நாளை முன்னிட்டு உங்களில் அநேகர் நேரில் வந்து வாழ்த்தி சென்றீர்கள். அநேகர் உங்கள் வாழ்த்துக்களை தொலைபேசி, வாட்ஸ்அப் வாயிலாகவும், தபால் வழியாகவும் தெரிவித்திருந்தீர்கள். உங்கள் அன்பிற்கு**

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், நீடிய ஆயுளுக்காகவும் ஜெபியுங்கள்.**

மார்ச் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த மாதத்தில் வடஇந்தியாவில் உள்ள கான்பூரில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். திருச்சி, சென்னை, செகந்திராபாத், விஜயவாடா, ராஜமன்றி கூட்டங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வேலையில்லாமல் இருப்பார்கள் என்றால் எங்கள் ஊழியத்தில் அநேக வேலைவாய்ப்புகள் உண்டு. அதன் விபரத்தை இந்த பத்திரிக்கையில் 13-ம் பக்கத்தில் பார்த்து இணைந்து செயல்படும்படி சொல்லுங்கள். ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

உங்கள் குடும்பத்தில் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக் காக விசேஷமாக நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தர் அவர்களுக்கு நல்ல சுகத்தையும், ஞானத்தையும், மன தைரியத்தையும் தருவார். பிள்ளைகளை மிக கடினமாக நடத்தாதேயுங்கள். கர்த்தர் தமக்கு சித்தமானதை அவர்கள் வாழ்வில் நிறைவேற்றுவார்.

ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள். உங்களால் முடிந்தவரை உற்சாகமாய் தாங்குங்கள். பத்திரிக்கைக்குரிய வருட சந்தா தொகையை செலுத்தி தொடர்ந்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். நம்பிக்கை டி.வி வாயிலாக வருகிற அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகளையும் பாருங்கள்.

**சமூக வலைதளங்கள் வாயிலாக வெளிவருகிற Ministry of Jesus-ன் அனுதின அற்புதம், புதிய பாடல்களை பார்த்து அநேகருக்கு share செய்யுங்கள். அனுதின அற்புதம் இன்னும் பல மொழிகளில் வெளிவர ஜெபியுங்கள்.**

எங்கள் அனைவருடைய சுகத்திற்காகவும் பயணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.

**இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர்,**

**மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். ரோமர் 1:4-5**

*Happy Resurrection day*

**இம்மாத வாக்குத்தத்தம்**

**ஓசியா 6:1-3**
**எசேக்கியேல் 16:6**
**ரோமர் 8:11**
**மத்தேயு 28:6**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**


**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
Ananda Stira @dranandastira
Margretstira
Jane Joshua @DrJaneJoshua
My Deliverance Church @mydeliverance.church
Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

**Ministry of Jesus**
**dr. janejosh**
**jonathanmosesrajstira**

ministryofjesus.in

drjane15




## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST tv
കേരളം
சனி
இரவு 7.30 – 8.00





# கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் மேன்மையும், உயிர்த்தெழுதலின் வல்லமையும்!

சிறப்பு தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன் - கலாத்தியர் 6 : 14**

**தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் - எபேசியர் 1:19**

எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நீங்கள் எல்லாவிதத்திலும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும், இம்மைக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற்று, எப்பொழுதும் நிறைவுள்ளவர்களாய் காணும்படி உங்களுக்காக எங்கள் அனுதின ஜெபத்தில் மன்றாடி ஜெபிக்கிறோம்.

**விசேஷமாக என்னுடைய 70-வது பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 13-ம் தேதி அன்று அருமையான பங்காளர்கள் பலர் என்னை நேரில் சந்தித்து, கிறிஸ்துவுக்குள் என்னையும், என் குடும்பத்தினரையும் வாழ்த்தி எங்களுக்காக ஜெபம் செய்தீர்கள். ஒரு சிலருக்கு விடுமுறை கிடைக்காதபடியால் வர முடியாவிட்டாலும் அவர் தம் இடத்திலேயே எனக்கு வாழ்த்துக்களை அனுப்பி ஜெபித்த ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்காகவும் அதிக நன்றி கூறுகிறேன்.**

உண்மையாகவே சரீரத்தில் பெலவீனமான எனக்கு நீங்கள் அன்போடுகூட வாழ்த்திவாக்குத்தத்தங்களை அனுப்பி உற்சாகப்படுத்தினீர்கள். என் ஆத்துமாவை அது குளிரப்பண்ணியது, மிகுந்த சந்தோஷம் தந்தது, உற்சாகப்படுத்தியது. அதோடு ஒரு புது பெலன் வந்தது போலவும் ஆயிற்று. **ரோமர் 16:16-ன்படி** ஒருவரை ஒருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் என்ற பவுலின் கட்டளையின்படி நீங்கள் என்னை அன்போடு வாழ்த்தி ஜெபித்ததற்காக நன்றி. அதுவும் அல்லாமல் கிறிஸ்துவுக்குள் என் மீதும் என் குடும்பத்தின் மீதும் நீங்கள் காட்டின அன்பிற்காகவும் நன்றி. கர்த்தர் தாமே தொடர்ந்து உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக!

அன்பான தேவ பிள்ளைகளே! குறிப்பாக இந்த மாதத்தில் நாம் சிலுவையின் பாடுகளையும், உயிர்த்தெழுதலையும் நினைவுகூறுகிறோம். பவுல் சொன்னது போல கிறிஸ்துவின் சிலுவை அல்லாமல் வேறு ஒன்றையும் குறித்து நாங்களும் மேன்மை பாராட்ட விரும்புவதில்லை. **(கலாத்தியர் 6: 14)** காரணம் உலகம் மாயை, உலகத்தில் காணப்படுகிறவைகளும் மாயை. எல்லாமே நிழலை போன்று அதிகாலையில் மலர்ந்து மாலையில் வாடிப் போகும் புல்லின் பூவை போல இருக்கிறது. **இந்த உலக வாழ்விலும், பரலோக வாழ்விலும் அழியாத ஒன்று இயேசுவின் சிலுவை பாடுகளாகும்.** ஆம். இயேசுகிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் வல்லமையைக் குறித்து உங்களுக்கு எழுதுகிறேன்.

**இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நீ கழுவப்பட்டாயா?**

- **அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான் களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத் தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியான வருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து:**
- **தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயி ருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக் காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலு மிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு,**
- **எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர், நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.**
- **பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத் தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது.**

**- வெளி. 5:8 -11**

பரலோகத்தில் கோடிக்கணக்கான பரிசுத்தவான்கள் இயேசுவை வாழ்த்தி பாடுவதாக காண்கிறோம். ஏனென்றால் இயேசுவின் சிலுவையின் இரத்தம் இல்லாமல் பரலோக வாசல் யாருக்குமே திறக்காது. இதை நான் அனுபவ ரீதியாக என் இரண்டாம் மரணத்தில் அறிந்திருக்கிறேன். தேவன் வாசம் செய்யும் பரலோகமானது, நம்முடைய பூமியை விட, அதை சூழ இருக்கிற வானத்து நட்சத்திரங்கள், கிரகணங்கள் அத்தனையையும் பார்க்கிலும் மிக உன்னதமான, மகிமையான, அதின் நீளம், அகலம், உயரத்தை மனித அளவினால் அளக்கவே முடியாத அத்தனை பெரிதான இடம். அது நித்தியமானது, அழியாமையுடையது. இந்த உலகின் வாழ்க்கை இன்றிருந்து நாளை மறைந்துவிடும். பரலோக வாழ்க்கை நித்திய நித்தியமாய் ஒவ்வொரு நிமிடமும், மகிமைக்கு மகிமை அதிகரித்து கொண்டேபோகும் வாழ்க்கையாகும். அதின் மாட்சிமையும், மகிமையையும் பூமியிலிருந்து கொண்டு முழுவதும் விவரிப்பது என்பது இயலாத ஒரு காரியம். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் வாசம் செய்யும் பரலோகம் இருப்பது உண்மை.

உலகில் வாழும் மக்கள் தங்கள் இஷ்டப்படி பரலோகம், பாதாளம், நரகம் என்பது கிடையாது. உத்தரிக்கும் ஸ்தலம் உண்டு என சொல்லலாம். ஆனால் இவைகள் அனைத்தும் மனிதர்களுடைய கற்பனையே. **நான் மூன்று முறை மரித்து இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்டு இந்த மூன்று இடங்களையும் பார்த்துள்ளேன். கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் தாங்கள் பட்டபாடுகளுக்கு இணையாக அளவிடப்பட முடியாத மாட்சிமையோடு மகிமையாக சதா காலங்களிலும் பரிசுத்த தேவனோடு வாழும் இடம் தான் பரலோகம்.**

பரலோகத்திற்குள் பிரவேசிப்பது எளிதான ஒரு காரியமல்ல. பரலோக வாசல்கள் மிக மிக பெரிதாக இருக்கும். முதலாவது அகலமாகவும், முடிவில் ஒடுங்கினதாகவும் இருக்கும். அந்த வாசலை காப்பது பரிசுத்தமும், மிக மகிமையான அக்கினியைப் போல் ஜுவாலிக்கிற இரண்டு கேரூபின்கள். அவர்கள் ஆறு சிறகுகளும், சிறகுகளுக்கு இடையில் அக்கினிமயமான உருவின பட்டயத்துடன் காணப்படுவார்கள். இவர்களை தாண்டித்தான் நீங்கள் செல்ல வேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ்கின்ற ஒவ்வொரு விசுவாசியின் ஆத்துமாவை அவரவருக்கு நியமிக்கப்பட்ட தேவ தூதர்களால் இறந்த சில விநாடியில் பரலோக வாசலுக்கு அழைத்து வந்து விடுகிறார்கள். வாசலை காக்கின்ற தூதர்களை பார்க்கும்பொழுது மிகவும் பயங்கரமாய் இருக்கும். அதில் ஒரு தூதன் தன்னுடைய சிறகை அசைத்தால் பல நூறு நட்சத்திரங்கள் சாம்பலாகிவிடும். அப்படி இருக்க ஒரு விசுவாசியின் சிறிய ஆத்துமா அங்கே வந்து நிற்கும்பொழுது அவர்கள் கேட்கின்ற கேள்வி ஒன்றேதான். **இதுவரைக்கும் நீங்கள்**

**இயேசுவின் இரத்தத்தால் (அதாவது விசுவாசிகள் மரணம் அடையும் நாள் மட்டும்) கழுவப்பட்டிருக்கிறீர்களா என்று தான் கேட்பார்கள். நீங்கள் அவரது இரத்தத்தால் கழுவப் பட்டிருக்கிறீர்கள் என்று இயேசு தாமே சாட்சி கொடுக்க வேண்டும். அதன் பிறகு தான் நீங்கள் அந்த மகிமையான பரலோகத்திற்குள் நுழைய முடியும்.**

உங்கள் மதம், மதம் சார்ந்த கொள்கைகள், நற்கிரியைகள், சர்ச் Denomination, உங்கள் அறத்தொண்டுகள், படித்த பட்டங்கள், செல்வங்கள், உயர்ந்த பதவிகள் போன்றவை களை வைத்து பரலோகத்திற்கு செல்லவே முடியாது. அதைப்பற்றி யாரும் அக்கறைப் படுவதும் இல்லை. ஏனென்றால், **ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறது. (எபிரெயர் 9: 27)** நீங்கள் இறந்த பிறகு உங்கள் பதவிகள், உங்கள் பெருமைகள், மகிமைகள் ஒன்றையும் கொண்டு போக முடியாது. உங்கள் ஆத்துமா ஒன்று பரலோகம் செல்ல வேண்டும் அல்லது பாதாளத்திற்கு செல்ல வேண்டும். பாவத்திலேயே வாழ்ந்து மரித்த எந்த ஒரு நபரும் இந்த பரலோகத்தை வந்தடைய முடியாது. பலவித உடல் ஒடுக்குதல்கள், சந்நியாசங்கள், கடினமான தவங்கள் எதுவும் உங்களை பரலோகத்திற்குள் கொண்டுபோய் சேர்க்காது. நீங்கள் யாராக இருந்தாலும் கர்த்தருடைய பலத்த தூதர்களின் கரங்களிலேயே இருப்பீர்கள். அவர்கள் தான் உங்களை கொண்டு போவார்கள்.

நான் இரண்டாம் முறை மரித்தபொழுது என் படிப்பு, வேலையை பற்றியோ, என் ஜாதி, உயர்ந்த நிலையை குறித்தோ அல்லது நான் போகும் ஆலயத்தை குறித்தோ, நான் செய்த தர்மம் மற்றும் புண்ணியங்களை குறித்தோ, செய்த தவங்களை குறித்தோ அங்கு கேள்வி கேட்கவில்லை.

**ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்கள். ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நீ கழுவப்பட்டாயா? என்று, உடனே இயேசுவின் கரத்திலிருந்து வந்த பரிசுத்த இரத்தம் என் ஆத்துமாவின் மேல் விழுந்தது. அதன்பின் மகிமையான பரலோக வாசல் எனக்கு திறக்கப்பட்டது.**

இயேசு! **நானே வழி, சத்தியம், ஜீவன் (யோவான் 10:7; 14:6)** என்று சொன்னது எத்தனை உண்மை பாருங்கள். சர்வத்தையும் அரசாண்டு கொண்டிருக்கிற மகா உன்னதமான தேவன் தமது இரு கரங்களை நீட்டினால் அண்ட சராசரங்களும் அப்பளம் போல நொறுங்கி சாம்பலாகிவிடும். அப்படிப்பட்ட உன்னதமான தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். இயேசு பாவத்தின் தண்டனையாக சிலுவை மரணத்தை அடைந்தார். அவர் தேவனுக்கு சமமாக இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுத்து அடிமையின் ரூபமெடுத்து மரண பரியந்தம் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்தவராக மாறினார். **(பிலிப்பியர் 2:6-8)** அதன் நிமித்தம் சாதாரண ஒரு குற்றவாளியைப் போல சிலுவையில் மரிக்க தம்மை ஒப்புக் கொடுத்தார். **(லூக்கா 22:37)** ஈட்டியால் அவருடைய விலாவைக் குத்தி கடைசி சொட்டு இரத்தத்தையும் வெளியே எடுத்து விட்டார்கள். **(யோவான் 19:34)** நமக்காக, நம் பாவங்களை எல்லாம் கழுவி தேவனுக்கும் நமக்கும் உள்ள பகையை நீக்கி பாவிகளாகிய நம்மை சுத்திகரிக்க தம்முடைய மாசற்ற இரத்தத்தை சிந்தினார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. **(லேவி 17:11, எபிரெயர் 9:22)** தேவ குமாரனாகிய இயேசுவை யாருமே கொலை செய்ய முடியாது. அவர் அவ்வளவு மகிமையானவர். **(மத்தேயு 17:1-6, யோவான் 10:18)** இன்னும் சொல்ல வேண்டும் என்றால் பாவம் அறியாத மீட்பர் இயேசுவை நமக்காக பாவமாக்கி நொறுக்கினார். **(2 கொரி. 5:21, ஏசாயா 53:10) தேவனுடைய சத்துருக்களாகிய நம்மிடத்தில் வைத்த மிகப்பெரிய அன்பினிமித்தம் நமக்கு வர வேண்டிய தண்டனையை சிலுவைச்சாவின் வழியாக அவர் ஏற்றுக்கொண்டார். அது தான் மேன்மை. அது தான் நமக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியம்.**

**ஒரு சமயம் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட சாது சுந்தர்சிங், அநேக மக்கள் செல்கின்ற ஒரு பாதை வழியாக சென்றார். அப்பொழுது அந்த பாதையில் ஒரு குழிக்கு மேல் சற்று நெருக்கமான இரும்பு கம்பியால் ஆன மூடப்பட்ட வாசல் இருந்தது. அநேகர் அதை பார்க்காமல் போய்விட்டார்கள்.**

சிலர் ஒதுங்கி சென்றார்கள். ஒரு சிலர் அந்த இடத்தை உற்றுப் பார்த்து சில ரொட்டி துண்டுகளையும், சிறு சிறு ஆகாரத்தையும் போட்டார்கள். சாதுசுந்தர்சிங் அந்த வழியே செல்லும் பொழுது அந்த சிறு ஒட்டையின் மூலமாக உற்றுப் பார்த்தபொழுது ஒரு துறவி அங்கிருந்து கடும் தவம் புரிவதை கண்டார். அவரை பார்த்து சாது, "ஐயா! இவ்வளவு தூரம் உங்களை ஒடுக்கி கடின தவம் புரிகிறீர்களே, நீங்கள் உண்மையிலேயே ஒரு பரிசுத்த மகான்" என நினைக்கிறேன் என்றார். அதற்கு அவர் சட்டென்று "என்னை பரிசுத்த மகான் என கூறாதீர்கள். நான் கடும் தவம் புரிந்தாலும் என் மனம் தீட்டுபட்டது, மற்றவர்களைப் போல கை, கால்களை கொண்டு பாவம் செய்யா விட்டாலும் என் மனதாலும், இருதயத்தாலும் நான் பாவியாக காணப்படுகிறேன். இந்த தவ முயற்சிகள் என்னை பாவ சிந்தையிலிருந்து விடுவிக்கவில்லையே" என்று துயரத்தோடு கூறினார்.

ஆம்! இன்று அநேக மக்கள் தங்களை தாங்களே ஒடுக்கி, எளிய உணவுகளை உண்டு, ஒரே சிந்தனையில் பல மணி நேரம் தவத்தில் இருப்பதாலும், ஏழை, எளியவர்களுக்கு நன்மை செய்வதாலும் தேவன் வாசம் செய்யும் பரலோகத்தை அடையலாம் என தவறாக நினைக்கிறார்கள். ஆனால் இயேசு சொன்னது போல **"என்னையல்லாமல் ஒருவனும் சர்வ வல்லமையுள்ள பிதாவினிடத்தில் வரமுடியாது" (யோவான் 14:6)** என்பதே உண்மை.

என் அன்பான தேவ மக்களே! **இந்த மாதத்தின் துவக்கம் முதல் கர்த்தருடைய பாடுகளையும், உயிர்த்தெழுதலையும் நினைக்கும் போதெல்லாம் அவர் நமக்காக சிந்தின இரத்தத்தை நினைத்து அவரை துதிப்போம்! போற்றுவோம்! மேன்மைப்படுத்துவோம்! அவருடைய மாசற்ற உண்மையான அன்பை மற்றவர்களுக்கும் நாம் சொல்வோம்.நித்திய ஜீவன் இயேசுவின் சிலுவை மரணத்தினால் தான் கிடைத்தது.**

அதுமாத்திரமல்ல, **கிறிஸ்து இயேசு சரீரத்தில் பட்ட தழும்புகளால் நம்முடைய சகலவிதமான நோய்களும் நீங்கி நாம் சுகமடைகிறோம் (ஏசாயா 53:5).** இதைத் தான் நம்முடைய ஒவ்வொரு கூட்டங்களிலும் இயேசுவை பற்றி நான் பேசும்பொழுது நோயாளிகள் சுகமாவதை நீங்கள் அறிந்து வருகிறீர்கள். கிறிஸ்துவின் காயப்பட்ட தழும்புகளால் குணமாக்க முடியாத வியாதி என்று ஒன்றுமில்லை. சகல வியாதிகளும் அவருடைய தழும்புகளால் குணமாகும். மனம் சோர்ந்து போகாதீர்கள்! அதிகமாய் வியாதிப் படும் பொழுது இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை நினைக்கும்பொழுது உங்கள் வியாதி உங்களைவிட்டு கடந்து போகும். **அவர் நமக்காக பாடுபட்டதின் நிமித்தம் நாம் துயரம் அடையும் பொழுது அவர் நம் அருகில் வந்து காட்சியளிக்கிறார். சில சமயங்களில் இயேசுவின் காயப்பட்ட கரத்தால் நம்மை தொட்டு காயங் களை ஆற்றி சுகமாக்குகிறார். பல சமயங்களில் இது என் வாழ்க்கையில் நடந்துள்ளது. உங்கள் சகோதரியான திருமதி. மார்கிரேட் அவர்கள் தொண்டையில் ஏற்பட்ட கேன்சர் வியாதியையும் அப்படித்தான் இயேசு சுகமாக்கினார். இன்று 35 ஆண்டுகளாக நன்றாக இருக்கிறார்கள். எந்தவிதத்திலும் கேன்ஸர் திரும்பி வரவில்லை. அதற்கான ஹீமோ மற்றும் ரேடியேஷன் சிகிச்சை தேவையில்லாமல் போனது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

## உயிர்த்தெழுதலின் வல்லமை!

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் கடைசியாக சந்திக்க வேண்டிய மிகப்பெரிய போர் மரணம். இந்த போருக்கு யாரும் தங்களை தப்புவித்து கொள்ள முடியாது என்று மகா பெரிய ஞானியாகிய சாலொமோன் கூறுகிறான். **(பிரசங்கி 8:8; சங்கீதம் 22:29; 49:12,14; ஏசாயா 5:14; 14:11,19 யோபு 10:20,21)** நம்முடைய முற்பிதாக்களாகிய ஆதாம், ஏவாள் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும்பொழுது கொடுக்கப்பட்ட தண்டனையே மரணம் ஆகும். **(ஆதி. 3:19; 6:3; எசேக். 18:4, 24)** நாம் எல்லோரும் பாவத்தின் கீழ் அடிமையாக்கப்பட்டு மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானின் கையில் விழுந்து விட்டோம். எனவே உலகில் எவ்வளவு பேர் புகழோடு

வாழ்ந்தாலும் அது நமக்கு நிலைத்து நிற்காது. நம்முடைய உடல் ஒரு நாள் மரிக்கும் பொழுது புழுக்களும், பூச்சிகளும் தின்றுவிடும். நம்மைப்பற்றிய நினைவும் சில வருடங்களில் இல்லாமல் போகலாம்.

தேவனாகிய கர்த்தர் ஆதாம் ஏவாளை படைத்து நீ மரித்துப்போவாய் என்று ஒருபோதும் அவர் சபிக்கவில்லை. அதற்கு பதிலாக அவன் நீடூழி வாழ்ந்து பலுகி பெருகவும், உலகில் அவருடைய ராஜ்யத்தின் மகிமைக்காக வாழவேண்டும் என்றே விரும்பினார். **தேவன் என்றென்றும் ஜீவிக்கிறவர்! அவரிடத்தில் மரணம் என்பதில்லை! அவர் வாசம் செய்யும் பரலோகத்திலும் மரணம் என்பது கிடையாது. (வெளி.21:4)** தேவன் ஆதாமையும், ஏவாளையும் எச்சரித்தும் அவர்கள் அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமல் தேவன் தந்த நல்ல உலகத்தை மரண தூதனாகிய பிசாசினிடத்தில் கொடுத்துவிட்டார்கள். எனவே தான் இன்றைக்கும் நாம் பலவிதமான மரணவியாதி களின் பாடுகளை அனுபவிக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். எனினும் மனங்கலங்காதீர்கள்!

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாம் அடைந்த மரணத்தினால் மரணத்தின் அதிபதியாகிய சாத்தானை வென்று விட்டார். (எபி. 2:14,15) மூன்றாம் நாளில் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைந்தார். இதன்மூலம் நாமும் மரித்த பிற்கு ஒரு நாள் தேவனுடைய சத்தத்தை கேட்போம். அப்பொழுது நம்முடைய மாம்ச சரீரம் பரலோகத்தின் மகிமையின் சரீரமாக மாறும். (1 கொரி. 15:43; யோவான் 5:25) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் நமக்கு எப்பொழுதுமே ஜெயம் உண்டு. எனவே இன்னும் அவருக்காக ஓடுவோம்! ஊழியங் களை தாங்குவோம்! (1 கொரி. 15: 57,58)**

அன்புள்ள தேவன் தம்மையே நமக்காக தியாக பலியாக கொடுத்தபடியால் அந்த அன்பை நினைத்து நாம் பாவம் செய்யாமல் இருக்கிறோம். நம்முடைய மாம்ச சரீரத்தை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுப்போம். **(கலா.2:20)** அதுமாத்திரமல்ல, கிறிஸ்தவ வாழ்க்கை அனுதினமும் தன்னை வெறுத்து சிலுவையை சுமந்து செல்லும் ஒரு வாழ்க்கையாகும். எனவே தான் உலகம் நம்மை பகைக்கிறது. ஆனால் கர்த்தரோ நம்மை நேசிக்கிறார். நம் மீது அன்பு கூறுகிறார். நம்மை புது சிருஷ்டியாக மாற்றுகிறார்.

கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்ட நம் ஒவ்வொருவரையும் கர்த்தர் உயிர்த்தெழுந்த வல்லமையினால் நிரப்புகிறார். பவுலை தேவன் பயன்படுத்தினது போல, சீஷர்களை பயன் படுத்தினது போல நம்மையும் அவருடைய ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்துகிறார். ஆதி அப்போஸ்தலர்கள் மற்றும் தேசத்தை அசைத்த பரிசுத்தவான்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையால் நிரப்பப்பட்டு இருந்தார்கள். அவர்களைக் கொண்டு கர்த்தர் பலத்த அற்புதங்களைச் செய்தார். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட நாம் கிறிஸ்துவின் பாடுகளையும், உயிர்த் தெழுதலையும் நினைக்கும்பொழுது நமக்குள் ஒரு உன்னதமான விசுவாசம் வருகிறது. எனவே **யோவானும், பேதுருவும் சொன்னது போல ஜீவனுக்கு அதிபதியாகிய இயேசுவின் நாமத்தில் எதையும் அவருடைய நாம மகிமைக்காக செய்ய நமக்கு பெலனையும், உயிர்த்தெழுந்த வல்லமையும் அவர் தருகிறார். (அப்போஸ்.3:15,16)**

## உயிர்த்தெழுதலின் வல்லமையினால் கால்கள் பெலன் அடைந்தன! இறந்தவன் உயிர் பெற்றான்!

**நான் ஒரு சமயம் ஈரோடு சி.எஸ்.ஐ. மைதானத்தில் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது பிறவியிலேயே நடக்க முடியாத ஒரு முடவனை கொண்டு வந்திருந்தார்கள். அவனைப்பார்த்து எழும்பி நட என்று சொன்ன வுடனே எழும்பி நடந்தார்.**

**சற்று தூரத்திலே ஒரு விதவை தாயின் மகனுடைய பிணத்தை எரிப்பதற்கு ஒரு சிலர் பாடையில் தூக்கிக்கொண்டு போனார்கள். உறவினர்கள் அனைவரும் பிற மதத்தை சார்ந்தவர்களாக இருந்தவர்கள். இந்த விதவை தாய் மாத்திரம் கிறிஸ்தவளாக இருந்தபடியால் தன் ஒரே மகனுடைய பிணத்தை புதைக்க அனுமதி கிடைக்காமல், தன்னை சூழ்ந்த அநேக உறவினரின்**

ஆலோசனையின்படி வேறு ஒரு இடத்தில் எரிப்பதற்கு கொண்டு சென்றார்கள். அந்த தாய் தன்னுடைய மகனுக்கு யோசேப்பு என்ற பெயர் வைத்திருந்தார். அவனுடைய வயது 24. மைதானம் முழுவதும் கூட்டம். அதற்கு வெளியே கடைகள், தெருக்கள் இருந்த படியால் என்னால் ஒன்றையும் பார்க்க முடியவில்லை. மைதானத்திற்கு வெளியே ஒலிப்பெருக்கியின் சத்தம் கேட்கின்ற தூரத்தில் தான் அந்த பிணத்தை எரிக்கும்படி கொண்டு செல்கிறார்கள். அந்த மகன் ஒரு குறிப்பிட்ட பாவத்தை மீண்டும் மீண்டும் செய்த படியால் மரண வியாதியால் இறந்திருந்தான். திடீரென்று ஆவியானவர் என் மூலமாய் அந்த விதவைத்தாயை பெயர் சொல்லி அழைத்து, உன் மகனாகிய யோசேப்பின் பிணத்தை எரிக்க கொண்டு போகிறாய். கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்தவர். அந்த வல்லமையால் இப்பொழுது உன் மகன் பாடையிலிருந்து எழும்பி உட்காருவான், கர்த்தர் உன் மகனுக்கு மீண்டும் ஜீவனை கொடுப்பார் என்று கூறினேன். கூட்டங்கள் முடிந்து ஸ்தோத்திர ஜெபக்கூட்டம் நடக்கும்போது அந்த தாயும், மகனும் சாட்சி கூறினார்கள்.

## உயிர்த்தெழுதலின் வல்லமையினால் உறுப்புகள் செயல்பட்டன!

அதுமாத்திரமல்ல, ஷோபா என்ற பிள்ளையை கொண்டு வந்தார்கள். அவள் 6 வயதாக இருந்தாலும் மூன்று மாத குழந்தை போல காட்சியளித்தாள். சரீர வளர்ச்சி குன்றிப்போய் பல உறுப்புகள் செயலற்று போயின. அவளுடைய இருதயம் வயிற்றுப் பகுதியில் அமைந்திருந்தது. அவள் பிழைக்க மாட்டாள் என்று கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் வேலூர் போன்ற பட்டணங்களில் உள்ள பெரிய பெரிய மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். அப்படிப் பட்ட நிலையில் இந்த குழந்தையின் உறவினரான ஒரு கிறிஸ்தவ செவிலியர் அந்த குழந்தைக்காக ஜெபிக்கும்படி என்னிடம் கொண்டு வந்தாள். அந்த குழந்தையை பார்க்கும்பொழுது எனக்கு நம்பிக்கை இல்லை. எனினும் அந்த செவிலியரிடம் **"இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார் அவர் நமக்காக தேவனுடைய வலதுபாரியத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கிறார், எனவே நீ கலங்காதே! குழந்தையின் பெற்றோர் எங்கே"** என்று கேட்டேன். அவர்கள் கிறிஸ்தவர் அல்ல. எனவே கூட்டத்திற்கு வரவில்லை என்று கூறினாள். சரி நீ போய் அவர்களிடம் **"குழந்தையை இயேசு தொடுவார், எனக்கு மூன்று நாள் அவகாசம் கொடுங்கள்"** என்று அவர்களிடம் சொல்ல சொன்னேன். அவளும் விசுவாசத்துடன் சென்று குழந்தையின் பெற்றோரிடம் கூறினாள். கூட்டம் முடிந்த அடுத்த வெள்ளிக்கிழமை குழந்தையின் தகப்பன் பழனிசாமி கவுண்டர் என்னை தொலைப்பேசியில் அழைத்தார். நீங்கள் சொன்னபடியே இயேசு எங்கள் வீட்டிற்கு வந்தார் மகளை தூக்கினார், ஆசீர்வதித்தார்! குழந்தை நார்மலாகி 6 வருட பெண் பிள்ளையாக மாறிவிட்டாள், பார்வை கிடைத்தது, காதுகள் கேட்டது, நன்றாய் பேசுகிறாள் என்று கண்ணீர் மல்க கூறி நன்றியை தெரிவித்தார். இன்றைக்கு அவள் ஆங்கில வழி பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், சிறு வயது முதல் பேசாத, கண் பார்வை இல்லாத, நடக்காத குழந்தையை இயேசு தாமே தொட்டு 100 சதவிகிதம் குணமாக்கிவிட்டதாக சாட்சி கூறினார்கள்.

*ஆம் எனக்கன்பானவர்களே!* **இயேசு இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். எனவே நம் வாழ்விலும் பெரிய அற்புதங்களை அவர் தவறாமல் செய்வார். அதில் சந்தேகமே இல்லை. கர்த்தர் தாமே உங்களோடிருந்து இன்னும் பெரிய காரியங்களை உங்கள் வாழ்வில் செய்வாராக.**

*இனி அவர் மனிதராக அல்ல, ராஜாதி ராஜாவாக சீக்கிரமாய் வரப்போகிறார்! நாம் நம்மை ஆயத்தப்படுத்துவோம், அவர் வருகைக்காக காத்திருப்போம்! ஒற்றுமையாக இருப்போம்! பெரிய காரியங்களை காண்போம்!*

Telugu Whats App No: 91770 87860

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

UPI Google Pay paytm PhonePe

**இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.**

## வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

**காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)**

## Cell no. 94888 45627, 80987 42638

**உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.**

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

**அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.**

# WE ARE HIRING

Trichy



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# அன்பு பங்காளர்களுக்கு உங்கள் சகோதரரின் விசேஷித்த வேண்டுகோள்!

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வல்லமையோடு உயிர்த்தெழுந்த பிறகு தமது சீடர்களுக்கு "நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" என்று கட்டளையிட்டார். பவுலும் 1 கொரி.9:16ல் "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" என்று கூறுகிறார்.**

ஆம் எனக்கன்பான தேவ பிள்ளைகளே! இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்பது ஒரு சந்தோஷமான காரியம். கிறிஸ்து இயேசு மானிடர் யாவருக்கும் கொண்டு வந்த இரட்சிப்பை எப்படி நாம் சொல்லாமல் இருக்கமுடியும்? இயேசுவின் மீது உண்மையான அன்புள்ளம் கொண்ட அனைவரும் இந்த பணியை செய்கிறார்கள். அப்போஸ்தலர்களாக, சுவிசேஷகர்களாக அல்லது மிஷனரிகளாக இந்த பணியை எந்தவிதமான லாபமும் கருதாமல், இருளில் இருக்கிற மக்கள் பெரிய வெளிச்சத்தை காண, நாடோறும் சுவிசேஷத்தை எடுத்துச்சென்று ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் ஜீவனையும் துச்சமென கருதி ஓடுகிறார்கள்.

உதாரணமாக நமது முற்கால மிஷனரிகளும் இறக்கும்வரை தங்களை சுவிசேஷத்திற்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தார்கள். கஷ்டமோ, துன்பமோ, குளிரோ, வெயிலோ, காடோ, மேடோ என்று பாராமல் பயணம் செய்து சுவிசேஷத்தை அறிவித்தார்கள்.

**சுவிசேஷத்தை அறிவிப்பது நமது கடமை. (1கொரி.9:16) இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் அன்பினால் பாவ வாழ்க்கையிலிருந்து மீட்கப்பட்டவர்கள், சரீரத்தில் சகல கஷ்டங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்கள், உலக வாழ்வில் சிறுமையிலிருந்து மேன்மை அடைந்தவர்கள், சந்தோஷமாய் தங்களை ஆட்கொண்ட தங்கள் எஜமான் இயேசுவிற்காக இந்த ஊழியத்தை செய்கிறார்கள்.**

நான் சிறு வயதிலிருந்து அதிக துன்பங்களையும், பாடுகளையும், சொல்லொண்ணா வேதனைகளையும் அனுபவித்தேன். இன்றும் சரீர பெலவீனத்தோடு வயதாக வயதாக இன்னும் கஷ்டப்படுகிறேன். **"இயேசு எனக்காய் ஜீவனை கொடுத்தார், இதுவரை தாங்கி வருகிறார் நான் எப்படி அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்காமல் இருப்பேன்"** என்று சொல்லி உற்சாகமாய் ஆத்தும அறுவடைக்காக நான் அதிக பிரயாசப்படுகிறேன். என் குடும்பத்தினரும் அதே தாகத்தோடு சுவிசேஷத்தை அறிவித்து வருகிறார்கள். எனவே அன்பான ஊழிய பங்காளர்களே, **நீங்களும் இந்த நற்பணியில் எங்களோடு இணைந்து இந்த நல்ல பணிக்காக ஜெபித்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

கடந்த மாதம் பழநி கூட்டங்களுக்கு ஸ்பான்சர் செய்த திருமதி. ஆலன் அவர்களுக்காக நன்றி கூறுகிறோம். அத்துடன் பெயர் சொல்ல விரும்பாத ஒரு வயதான தாய் கான்பூர் கூட்டங்களுக்காக சில செலவுகளுக்கு ஸ்பான்ஸர் செய்துள்ளார்கள். திருச்சபையின் வழியாக இந்த கூட்டம் நடைபெற்றாலும் இதை ஸ்பான்சர் செய்தது ஒரு 80 வயது நிரம்பிய மூதாட்டி! ஒரு காலத்தில் அவர்கள் கணவரோடு இணைந்து ஊழியம் செய்தவர்கள்!



இந்த மாதம் நடைபெறப் போகிற ராஜமன்றி கூட்டங்களின் ஒரு பங்கு செலவுகளை பொறுப்பெடுத்துக் கொண்ட உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் அருமையான திரு.சுபாஸ் அவர்களுக்காக நன்றி கூறுகிறோம்.

விஜயவாடா மற்றும் ஐதராபாத்தில் கூட்டங்கள் நடைபெற உள்ளது. இதற்கான செலவுகளை நீங்கள் கர்த்தருக்குள் தீர்மானித்து தாங்குங்கள். ஏனெனில் சுவிசேஷ கூட்டங்களுக்கு நாம் செலவு செய்கிற பணம் திரும்ப வராது. அன்பரின் ஊழியம் ஐசுவரியவான்களை சார்ந்தது அல்ல. சாதாரண மக்களாகிய உங்களையே நாங்கள் நாடி இருக்கிறோம். எனவே கர்த்தருக்காக தயவாக இந்த கூட்டங்களுக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஒரு குடும்ப ஆசீர்வாத கூட்டம் பெரிய அளவில், பட்டணங்களில் நடத்த 1 முதல் ஒன்றரை லட்சம் (1,50,000/-) தேவை. சுவிசேஷ பொது கூட்டம் நடத்த 5 முதல் 10 லட்சம் தேவை. (Rs.5,00,000/- to 10,00,000/-) இந்த கூட்டங்களின் வாயிலாக சந்திக்கப்படும் ஆத்துமாக்களின் பலனை கர்த்தர் உங்கள் கணக்கிலும் எழுதுவார். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.**

**தொலைக்காட்சி வாயிலாக சுவிசேஷத்தை பல மொழிகளில் அறிவிப்பதற்காக ஜெபியுங்கள். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி 30 நிமிடம் ஒளிபரப்ப 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் (Rs.25,000/- to 30,000/-) தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் இந்த மாபெரும் ஊழியத்தை தாங்கலாம். "உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்" (2 கொரி. 9:7)**

நூற்றுக்கணக்கான நம்முடைய பங்காளர்களின் உதவியாலும், பெயர் சொல்லிக்கொள்ள விரும்பாத ஒரு சிலரின் உதவியினாலும் கர்த்தர் நமக்கு இந்த நல்ல அலுவலகத்தையும், ஆலயத்தையும் கொடுத்துள்ளார். அதற்காக தேவனை துதியுங்கள். வெப்ப காலம் நெருங்கிவிட்டது. அன்பர்களாகிய நீங்கள் நமது ஆலயத்தின் வெளி வேலையான பெயிண்டிங் பணிக்கு உதவி செய்வீர்கள் என்று நம்புகிறோம். நமது ஜெப ஸ்தலத்தினுடைய முழுமையான பெயிண்டிங் வேலைகளை செய்து முடிக்க பல லட்சங்கள் தேவைப்படுகிறது. இந்தப் பணிக்கு தாராளமாய் தாங்குங்கள். நெகேமியா சொன்னது போல கர்த்தருடைய வேலையை துரிதமாய் செய்வோம்.

**பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப் பண்ணுவார். அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம் - நெகேமியா 2:20. எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன் - சங்கீதம் 122: 9.**

**உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள், அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் - ஆகாய் 1 : 7,8**



# Praise Report
# துதி அறிக்கை

## 16 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை பாக்கியம்!



என் உறவினரின் மகனுக்கு திருமணமாகி 16 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் மேற்கொண்டார்கள். குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். இதனால் மனவிரக்தி அடைந்து சமாதானமில்லாமல் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

சென்னையில் மகன் வேலை பார்த்து வருவதால் அங்கு நடைபெறும் கூட்டத்திற்கு சென்று **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்திக்கும்படி கூறினேன். மகன், மருமகள் இருவரும் **சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில்** கலந்துக் கொண்டார்கள். சகோதரர் அவர்கள் நிலையை கேட்டறிந்து **"உங்களுக்கு யார் குழந்தை இல்லை என்று சொன்னது, உங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கும்"** என்று தீர்க்கதரிசனமாக கூறி ஜெபித்தார்கள். **சகோதரர் அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்ன வார்த்தையின்படியே மருமகள் கர்ப்பம் தரித்தாள். இது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரட்டை பெண் குழந்தைகளை பெற்றெடுக்க சர்வவல்லமையுள்ள தேவன் கிருபை செய்தார். 16 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பிறந்தது எங்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கிறோம்.**

**- திருமதி. டெய்ஸி அம்மாள், தேவகோட்டை**

## இழந்த வேலையை மீண்டும் அருளிய கர்த்தர்!



என் அக்காவின் மகன் ஒரு கல்லூரியில் வேலை செய்து வருகிறான். வேலையில் அதிகமான போராட்டங்கள் ஏற்பட்டது. சிலருடைய பொறாமையினால் வேலையை இழக்கும் சூழ்நிலைஏற்பட்டது. அந்த நேரத்தில் நானும் என் அக்காவும் திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து கண்ணீரோடு ஜெபித்து சென்றோம். **ஜெபம் முடிந்து சென்றுக் கொண்டிருந்தப் பொழுதே நல்ல செய்தி வந்தது. கல்லூரி முதல்வர் மகனை அழைத்து வேலைக்கு வரும்படி சொல்லி விட்டார். இன்னொரு அதிசயமும் கர்த்தர் செய்தார். மகன் Ph.D. முடித்து அதற்கான அப்ரூவல் வராமல் இருந்தது. அந்த அப்ரூவலும் அந்த நாளே வரும்படி கர்த்தர் தயை செய்தார். ஜெபம் முடிந்து வீட்டுக்கு செல்வதற்கு முன்பே இயேசப்பா இரட்டிப்பான நன்மையைத் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- சகோதரி. உமா தேவகிருபை, திருக்காட்டுப்பள்ளி**

**dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org**

# அற்புத சுகத்தையும், அபிஷேகத்தையும் அருளிய கர்த்தர்!



என் பெயர் மணிமேகலை. சமீபத்தில் எனக்கு பிரஷர் குறைந்து மிகுந்த பெலவீனத்துடன் இருந்தேன். அப்பொழுது **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு போன் மூலம் தொடர்புக்கொண்டு, அப்பா எனக்கு முடியலை என சொன்னேன். **உடனே அவர்கள் பயப்படாதே, இயேசப்பா உன் வீட்டிற்கு வருவார் என சொல்லி பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பின் ஆண்டவரே எனக்கு உயிர் பிச்சை கொடுங்கள். பிள்ளைகள் இருக்கிறார்கள் என ஜெபித்தப்படி படுத்திருந்தேன். அப்பொழுது ஒரு கரம் என்னை நோக்கி மூன்று முறை வந்தது. இயேசப்பா நீங்கதானா என கேட்டப் பொழுது மீண்டும் அந்த கரம் என்னை நோக்கி வந்தது. பிரஷர் இயல்பு நிலைக்கு வந்து படுக்கை யிலிருந்து எழும்பிவிட்டேன்.**

**தஞ்சாவூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்தப்பொழுது Sis. Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் ஜெப வேளையில், இருதய பெலவீனத்தை கர்த்தர் எடுத்துப் போடுகிறார் என சொன்னப்பொழுது என் மேல் ஒரு வல்லமை இறங்கியதை உணர்ந்தேன். தொடர்ந்து ஜெபவேளையில், ஊழியம் செய்யவேண்டும் என்ற வாஞ்சையுடன் இருக்கிறவர்கள் மேல் கர்த்தர் அபிஷேகத்தைத் தருகிறார் என சொன்னார்கள். அந்த நேரத்தில் என்மேல் கர்த்தருடைய அபிஷேகம் இறங்கியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். - சகோதரி. மணிமேகலை, பட்டுக்கோட்டை**

# குழந்தை பாக்கியத்தை அருளிய கர்த்தர்!



என் பெயர் மேரிபாய். என் மகளுக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. அதனால் அதிக கவலையுடன் இருந்தேன். **2022-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து சகோதரர் Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் ஜெபித்துவிட்டு அடுத்த வருடத்தில் மகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று சொன்னார்கள். **சகோதரர் சொன்ன வார்த்தையின்படியே கர்த்தர் என் மகளுக்கு இரங்கி, ஜனவரி 14-ம் தேதி குழந்தை பிறக்கும்படி அற்புதம் செய்தார். இயேசுவின் நாமம் மகிமைப்படுவதாக! எங்களுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறோம்.**

**- சகோதரி மேரிபாய், கன்னியாகுமரி.**



என் வாலிப நாட்களில் நான் பலவித நெருக்கங்களில் இருந்துக் கொண்டு கஷ்டப்பட்ட பொழுது **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஊக்கமாக ஜெபம் செய்து, சோர்ந்து போன என்னை கர்த்தர் நிச்சயமாக ஆசீர்வதிப்பார் என்று தீர்க்கதரிசனம் சொல்லி என்னை உற்சாகப் படுத்தினார்கள். தொடர்ந்து இதுவரை என்னை ஜெபத்தாலும், நல்ல ஆலோசனைகளாலும் வழி நடத்தி வருகிறார்கள்.

**சகோதரர் அவர்கள் சொன்னது போலவே எனக்கு நல்ல வேலை கிடைத்தது, திருமணம் நடந்தது, நல்ல ஒரு வீட்டை கர்த்தர் கொடுத்தார். எங்கள் குழந்தை பிறந்து incubator-ல் சில மாதங்கள் இருந்தப்பொழுதும் கர்த்தருடைய கிருபையாலும், சகோதரரின் ஜெபத்தாலும் குழந்தை நல்ல சுகத்துடன் நார்மலாக இருந்து வருகிறான்.**

இவை எல்லாவற்றுக்கும் காரணம் ஐயா அவர்களின் ஊக்கமான ஜெபமே! எனவே என் வாழ்நாள் முழுவதும் **SJ Saves Trust** -ல் உள்ள **ஏழை மாணவர்களுக்கு நல்ல உணவு வழங்க உதவி செய்கின்றேன். இதற்கு முன்பு குடிசையில் வாழ்ந்து வரும் 100 பிள்ளைகளுக்கு புதியதொரு ஆடைகள் எடுத்துக் கொடுத்துள்ளேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- Sis. துஷாணி**

## வயிற்றில் ஏற்பட்ட கேன்சர் நோயிலிருந்து அற்புத சுகம்!



நான் சேலம் மாவட்டத்தில் வசிக்கின்றேன். வங்கியில் வேலை பார்த்து வருகின்றேன். எனக்கு திடீரென்று வயிற்றில் பிரச்சனை ஏற்பட்டு அதிக வலியால் வேதனைப்பட்டேன். மருத்துவமனை சென்று பரிசோதனை செய்ததில் கேன்ஸர் என்றும், உடனடியாக ரேடியேஷன் மற்றும் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்றும், அப்படி சிகிச்சையளிக்கவில்லை என்றால் உயிருக்கு ஆபத்தான நிலையாகி விடும் என்றும் மருத்துவர்கள் சொல்லிவிட்டனர்.

இதனால் மிகவும் பயந்து, கண்ணீர் விட்டு அழுதோம். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு. எனது மனைவி நர்சிங் மாணவிகளுக்கு பேராசிரியராக பணியாற்றுகின்றார். என்னுடைய சகோதரி ஜெனிதா மற்றும் அவரது கணவர் பாஸ்டர் கிறிஸ்டோபர் இருவரும் S.J.S.T ட்யூசன் மையத்தில் படிக்கும் 300 பிள்ளைகளை கண்காணித்து வருகிறார்கள். அவர்கள் மூலம் ஐயாவை சந்திக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

எனது இரண்டு சிறிய பிள்ளைகளை பார்த்தவுடன் ஐயா மிகவும் மனதுருக்கத்துடன் **"எனது சரீரத்தில் கேன்ஸர் பகுதியில் கை வைத்து சிறிய ஜெபம் செய்தார்கள். அந்த நேரத்தில் ஒரு வல்லமை எனக்குள் இறங்கினதை உணர்ந்தேன். ஒரு சில நாளில் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை சென்றோம். அங்கு மீண்டும் எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட்டது. முடிவில் எல்லாவித டெஸ்டு களும், Biopsy-ம் எடுத்து விட்டு எனக்கிருந்த கேன்ஸர் தற்பொழுது இல்லை"** என்று கூறிவிட்டனர். இதைக் கேட்டு நானும், எனது மனைவியும் அதிக மகிழ்ச்சி அடைந்தோம். ஜெபத்தை கேட்டு அற்புத சுகத்தை தந்த தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம். இப்பொழுது நலமுடன் எனது பணிக்கு செல்கின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. ஸ்டான்லி பாக்கியராஜ், சேலம்**

## தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே தெரிந்து கொண்ட தேவன்!



1997-ல் மணப்பாறையில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் நற்செய்தி பெருவிழாவிற்கு வந்திருந்தார்கள். அந்த சமயத்தில் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் மனக்கவலையோடு இருந்தேன். கூட்டத்தின் முடிவில் சகோதரர் அவர்கள் எனக்காக ஜெபித்து, **கர்த்தர் உங்களுக்கு ஒரு ஆண் குழந்தையைத் தருவார், அந்த மகனை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.** சகோதரர் சொன்ன வார்த்தைக்கு நாங்கள் கீழ்ப்படிந்து ஒப்புக்கொண்டோம். ஒரு மாதத்தில் என் மனைவி கர்ப்பம் தரித்தாள். 1998-ஆம் ஆண்டு எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இப்பொழுது மகனுக்கு 25 வயதாகிறது. தற்பொழுது அவன் AG church-ல் ICM பாஸ்டராக ஊழியம் செய்து வருகிறான். தாயின் கருவில் உருவாவதற்கு முன்பே தெரிந்துக் கொண்ட கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- சகோ. ஜெபராஜ், மணப்பாறை**



கணவரை இழந்து அதிக துன்பத்தில் இருக்கும்பொழுது எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும் விசேஷமாக என் மகள் ரோசிலினுடைய மேற்படிப்பு, வெளிநாட்டு வேலை, தேர்விற்காக நாங்கள் கண்ணீர் வடிக்கும்பொழுது எல்லாம் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஒரு தகப்பனைபோல எங்களை அன்போடு அழைத்து தீர்க்கதரிசனமாய் ஜெபிப்பார்கள். **கர்த்தர் ஐயா அவர்களின் ஜெபத்தை கேட்டு, என் மகளை உன்னத நிலைக்கு உயர்த்தி ஆசீர்வதித்துள்ளார். எனவே அன்பரின் ஊழியத்திற்கும், ஐயா அவர்களின் தனிப்பட்ட மருத்துவ செலவுகளுக்காகவும் நானும் என் மகளும் சேர்ந்து எங்களால் இயன்றவரை உதவி செய்கிறோம். லூக்கா 8:3ன்படி எளிமையான ஸ்திரீகள் இயேசுவையும், சீஷர்களையும் தாங்கினது போல, நாங்களும் பொருத்தனையோடு தேவ ஊழியரையும், அவர்கள் குடும்பத்தினரையும் எப்பொழுதும் தாங்கி வருகிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!**

**- திருமதி. பாத்திமா லில்லி, சென்னை**

# ஏப்ரல் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

## ஜீவன்

| | |
|---|---|
| 1 | கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர்; ஸ்தோத்தரிக்கப்படுவாராக; என் ரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் உயர்ந்திருப்பாராக. (2 சாமு. 22:47) |
| 2 | குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். (1 யோவான் 5:12) |
| 3 | நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை. (நீதி. 12:28) |
| 4 | அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (யோவான் 1:4) |
| 5 | தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். (ரோமர் 6:23) |
| 6 | கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். (பிலிப்பியர் 1:21) |
| 7 | இயேசு அவளை நோக்கி : நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; (யோவான் 11:25) |
| 8 | ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவே இருக்கிறார். (யோசுவா 3:10) |
| 9 | என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; (சங். 42:2) |
| 10 | என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. (யோவான் 5:24) |
| 11 | புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டு விடாதே; அதைக் காத்துக் கொள், அதுவே உனக்கு ஜீவன். (நீதி. 4:13) |
| 12 | நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10) |
| 13 | கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; (எரே. 10:10) |
| 14 | ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோவான் 17:3) |
| 15 | நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. (மத். 16:16) |

| | |
|---|---|
| 16 | அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6) |
| 17 | தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். (நீதி. 22:4) |
| 18 | என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. (யோவான் 6:54) |
| 19 | நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. (2கொரி 6:16) |
| 20 | ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும். (பிரசங்கி 7:12) |
| 21 | நீதியையும் தயையையும் பின்பற்றுகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான். (நீதி. 21:21) |
| 22 | உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோ. 3:3) |
| 23 | என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. (1 பேதுரு 1:23) |
| 24 | எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம். (1தீமோ. 4:10) |
| 25 | தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. (1தீமோ. 4:8) |
| 26 | மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத். 16:26) |
| 27 | நானோ வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; (யோவான் 6:51) |
| 28 | நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். (அப்போஸ். 13:48) |
| 29 | தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். (1 யோவான் 5:11) |
| 30 | நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. (1தீமோ. 6:19) |



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

**அன்பே பிரதானம்! சகோதர அன்பே பிரதானம்!**
**விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவைகளில் அன்பே பெரியது!**
**1கொரி. 13:13**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் நமது **S J Saves Trust** மூலம் இலவச மருத்துவ முகாம் நடத்துவதற்கு தேவன் உதவி செய்தார். இந்த பணிக்கு உதவி செய்கிற அன்பு பங்காளராகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

**Dr.Sathesh, M.B.B.S., Dr.Mrs.Anbumani, B.S.M.S., Dr.Sasikala, M.B.B.S. Mrs.Indira&Senior Nurses** வந்து உதவி செய்தனர். இவர்களுக்காக தேவனை துதிப்போம். இலவச மருத்துவ முகாமில் புரோட்டின் பவுடர், **Cough Syrup** மற்றும் வியாதிக்கு ஏற்ப விலையுயர்ந்த மருந்துகளும் கொடுக்கப்பட்டது. சுமார் 400 பேர் பயன் அடைந்தனர். அத்துடன் டிபன் கேரியர், நல்ல உணவும் (பிரியாணி), ஏழை பெண்களுக்கு புடவையும் வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் உள்ள **SJ Saves Trust** பயிற்சி மையத்தில் ஏழை பெண்களுக்கு தையல் பயிற்சி கொடுத்துள்ளோம். இதில் பயிற்சி பெற்ற 15 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கினோம்.

சமீபத்தில் தகுதி பெற்ற ஏழை பெண்களுக்கு 8 தையல் இயந்திரங்களை கொடுத்தோம். எங்கள் வாழ்வாதாரத்திற்கு மிகவும் பிரயோஜனமானதாக இருக்கும் என்று கூறி அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

இன்னும் நாம் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போம். ஏற்ற காலத்தில் பலனை பெறுவோம். தொடர்ந்து இந்த அறப்பணிகளை நன்கு செய்ய ஜெபியுங்கள்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | |
|---|---|
| Bank A/c Name | : SJ Saves Trust |
| Account No. | : 36477148891 |
| Bank Name | : State Bank of India |
| Branch | : Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : SBIN 0000930 |
| A/c Type | : Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**